4. கவன ஈர்ப்பு.

(1) அரசு உயர்நிலைப் பள்ளிகளில் முதல் நிலை தமிழாசிரியர்களாகப் பதவி உயர்வு பெற்றவர்கள் பதவியை வரன்முறைப்படுத்தும் தேதியை 21—3—1974க்கு மாற்றியதால் ஏற்பட்டுள்ள அவதி குறித்து.

திரு. எம். சங்கரலிங்கம்: மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

"25—2—1971ல் அரசாணை எண் 326-ன்படி அரசு உயர்நிலைப் பள்ளிகளில் முதல் நிலை தமிழாசிரியர்களாகப் பதவி உயர்வு பெற்றவர்கள், முதல்நிலை தமிழ் ஆசிரியராகப் பதவி பெற்ற அந்த நாளிலிருந்து அவர்களுடைய பணியை வரன்முறைப்படுத்த வேண்டுமென்று அரசு ஆணை பிறப்பித்திருந்தது. தற்போது குறிப்பாணை எண் 89091/பி.2/77-2, நாள் 27—9—77-ன் படி அரசுப் பணியிற் சேரும்போது 30 வயதுக்கு மேற்பட்ட காரணத்தால் வரன்முறைப்படுத்தும் தேதியை 21—3—1974க்கு மாற்றியுள்ளார்கள். ஊதியக் குறைப்புச் செய்தும், நிலுவையினைப் பிடித்தம் செய்தும் ஆணை பிறப்பித்துள்ளமையால் திருநெல்வேலி மாவட்டத்தில் 11 தமிழாசிரியர்களும், மாநில அளவில் நூற்றுக்கும் மேற்பட்ட முதல்நிலைத் தமிழாசிரியர்களும் பாதிக்கப்பட்டுள்ளார்கள். இந்த ஆணை பள்ளிக் கல்வி இயக்குநர் நடவடிக்கை எண் 1969/76 பி1/72, நாள் 6—10—72படியும், மெமோ எண் 55399/72 கல்வி, நாள் 18—10—72 படியும் 40 வயது வரை, பணியில் சேர்த்துக்கொள்ளலாம் என்ற விதிக்கு மாறுபட்டுள்ளது என்பது குறித்து."

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: துணைத் தலைவர் அவர்களே, 1—4—1970க்குப் பின்னர் அரசினர் 'பி' பிரிவு உயர்நிலைப்பள்ளியில் நேரிடையாக இரண்டாம் நிலைத் தமிழாசிரியர்கள் நியமனம் செய்யப்பட்டனர். இவ்வாசிரியர்கள் முதல்நிலை தமிழ் ஆசிரியர் பணிக்குரிய கல்வித் தகுதிகளைப் பெற்றிருந்தால் அரசாணை எண்கள் 325, கல்வி, நாள் 25—2—1971 1724, கல்வி, நாள் 28—10—1972 மற்றும் 63, கல்வி, நாள் 17—1—1974-ன் படி முதல் நிலைத் தமிழாசிரியர் பணிக்கு மாற்றி பதவி உயர்வு அளிக்கப்பட்டனர்.

இரண்டாம் நிலைத் தமிழாசிரியர் பணியிலிருந்து முதல்நிலைத் தமிழாசிரியர் பணிக்கு மாற்றி பதவி உயர்வு அளிக்கப்பட்ட முதல் நிலைத் தமிழாசிரியர்கள் இரண்டாம் நிலைத் தமிழாசிரியர் பணியில் தகுதிகாண் பருவம் முடிக்கத் தேவையில்லையென்றும் இரண்டாம் நிலைத் தமிழாசிரியர் பணியிலிருந்து மாற்றி

முதல் நிலைத் தமிழாசிரியர் பணியில் பதவி உயர்வு அளிக்கப்பட்ட தேதியில் (முதல்நிலை தமிழ் ஆசிரியர் பணியில்) வரன்முறை செய்யலாமென்றும் அரசு குறிப்பாணை எண் 5471—பி2/76-9 கல்வி, நாள் 17-8-1970-ல் ஆணையிடப் பட்டுள்ளது. இவ்வரசாணையின்படி இரண்டாம் நிலையிலிருந்து முதல் நிலை தமிழ் ஆசிரியர் பணிக்கு மாற்றி பதவி உயர்வு அளிக்கப்பட்ட முதல்நிலைத் தமிழ் ஆசிரியர்கள் யாவருக்கும் பணி வரன்முறைப்படுத்தி ஆணை பிறப்பிக்கப் பட்டது.

ஸ்தல ஸ்தாபன நிலை விதிகளில் (Statutory Rules) வயது வரம்பு இல்லாததால் 1-4-1970-க்குப் பின் ஒரு சிலர் 30 வயதிற்கு மேற்பட்டவர்கள் இரண்டாம் நிலைத் தமிழாசிரியர் பணியில் நியமனம் செய்யப்பட்டனர். இவ்வாசிரியர்களை இரண்டாம் நிலைத் தமிழாசிரியர் பணியில் 21-3-1974-ல் தான் வரன்முறை செய்யப்படவேண்டுமென்று அரசாணை எண். 765, கல்வி நாள் 16-5-1974-ல் ஆணையிடப்பட்டது. ஆனால் இவ்வாசிரியர்கள் புத்தி ஒன்றில், குறிப்பிட்டுள்ள அரசாணைகளின்படி 26-2-1971, 26-10-1972 மற்றும் 1—1—1974 ஆகிய தேதிகளில் இரண்டாம் நிலைத் தமிழாசிரியர் பணியிலிருந்து மாற்றி முதல் நிலைத் தமிழ் ஆசிரியர் பணிக்கு பதவி உயர்வு அளிக்கப்பட்டுவிட்டனர்.

எனவே இவ்வாசிரியர்களை முதல்நிலைத் தமிழ் ஆசிரியர் பணியில் அரசு குறிப்பாணை எண் 5471-1 பி2/76-9, கல்வி, நாள் 17-8-1976—ன படி, இரண்டாம் நிலைத் தமிழாசிரியர் பணியிலிருந்து மாற்றி முதல் நிலைத் தமிழ் ஆசிரியர் பணிக்கு பதவி உயர்வு, அளிக்கப்பட்ட தேதியில் வரன்முறைப்படுத்தி ஆணை பிறப்பிக்கப்பட்டது சரியல்ல என்றும் 21—3—1974-லிருந்துதான் பணி வரன்முறை செய்யவேண்டுமென்றும் அரசு குறிப்பாணை எண் 89091/பி2 /77-2, கல்வி, நாள் 27-9-1977-ல் ஆணையிடப்பட்டது.

ஆகையால் அரசு குறிப்பாணை எண். 89091/பி2/77-2 கல்வி, நாள் 27-9-1977-ன் படி வயது வரம்பு மீறியவர்களுக்கு ஏற்கனவே பணிவரன் முறை செய்து பிறப்பித்த ஆணையை ரத்து செய்தும், அவர்கட்கு வழங்கப் பட்ட அதிக உயர்வுத் தொகையை பிடித்தம் செய்யும்படி ஆய்வு அலுவலர் களுக்கு அறிவுரை வழங்கப்பட்டதென்றும் பணிவுடன் தெரிவிக்கப்படுகிறது. பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க. எண். 196976/பி1/72, நாள் 6-10-1972-ல் கண்டுள்ள உத்தரவின்படி 40 வயது வரை வயது வரம்பு விதியினை தளர்த்துவது ஆரம்பப் பள்ளியில் பணி புரியும் ஆசிரியர்கள் பி.டி. பட்ட தாரிகளானாலும் முதல் நிலைத் தமிழாசிரியர்கள் பதவிக்குத் தகுதி பெற்றிருந்

258 அரசு உயர்நிலைப் பள்ளிகளில் முதல் நிலை தமிழாசிரியர்களாகப் பதவி உயர்வு பெற்றவர்கள் பதவியை வரன்முறைப்படுத்தும் தேதியை 21-3-1974க்கு மாற்றியதால் ஏற்பட்டுள்ள அவதி குறித்து

தாலும் ஐந்து ஆண்டுகள் ஆசிரியர் பணி புரிந்திருந்தால் அவர்கள் மற்ற வகைகளில் அப்பதவிக்குத் தகுதியுடையவரெனத் தேர்வாணைக் குழுவினால் கருதப்பட்டு தேர்ந்தெடுக்கப்படுவதற்கு மட்டுமே பொருந்தும். தமிழாசிரியர்களை பொதுப்பணி தேர்வாணைக் குழுவினால் நேரிடையாகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு மட்டுமே மேற்படி ஆணை பொருந்துமே தவிர முதல்நிலைத் தமிழாசிரியராக பதவி உயர்வு பெற இவ்விதி பொருந்தாது.

(முற்பகல் 11-10)

திரு. எம். சங்கரலிங்கம்: துணைத் தலைவர் அவர்களே, கல்வி இயக்குநருடைய நடவடிக்கை 6-10-1972-ன்படி ஒரு ஆசிரியரை, ஏனைய ஐந்தாண்டுகளாகப் பணி புரிந்தவரை, தேர்ந்தெடுக்கலாம் என்று தேர்வாணைக் குழு ஒப்புதல் கொடுத்திருக்கிறது. நான் குறிப்பிடுவது அவர் அதற்கு முன்னால் இடைநிலை இரண்டாம் நிலை தமிழாசிரியராக 30 வயதுக்கு முன்னால் நியமிக்கப்பட்டு, அதே பள்ளியில் முதல் நிலைத் தமிழாசிரியர் பதவி உயர்வு பெற்றவர். அவர்கள் எந்தத் தேதியில் பதவி உயர்வைப் பெற்றார்களோ அந்தத் தேதியில் வரன்முறைப்படுத்தப்பட்டு, தகுதிகாண் பருவம் முடியப் பெற்றவர். திரும்பவும் மாறுதல் உத்தரவைத் தேர்வாணைக் குழு அளித்ததால், அதில் அவருக்குச் சலுகை அளிக்க அரசு பரிசீலனை செய்ய வேண்டும். இல்லாவிட்டால், பல ஆசிரியர்கள் தங்கள் சம்பளத்தில் ரூ. 90-க்கு அதிகமாகத் திருப்பிக் கொடுக்க வேண்டிய அவசியத்தில் இருக்கிறார்கள். அரசு அதைப் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: உறுப்பினர் கருத்து பரிசீலனை செய்யப்படும்.

(2) திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் காட்டூரில் உள்ள கோத்தாரி சர்க்கரை ஆலை மூடப்பட்டுள்ளது குறித்து.

திரு. கே. எஸ். கணபதி: துணைத் தலைவர் அவர்களே, திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் காட்டூரில் உள்ள கோத்தாரி சர்க்கரை ஆலையின் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்ததனால் இந்த ஆலை மூடப்பட்டது. இதனால் இப்பகுதிகளில் உள்ள தொழிலாளர் வகுப்பினருக்கும், விவசாயிகளுக்கும் ஏற்பட்டுள்ள இடர்பாடு குறித்து மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் கவனத்தை ஈர்க்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: துணைத் தலைவர் அவர்களே, திருச்சிராப்பள்ளி ஜில்லாவில் உள்ள கோத்தாரி சர்க்கரை மற்றும் கெமிகல்